அரசியலில் ஈடுபடப்போவதாகத் தோன்றியது. இந்நோக்கத்துக்காக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த ஈழமுரசுப் பத்திரிகை தமிழர் விடுதலை ஐக்கிய முன்னணி மீது மிகவும் மரபுமுறையான தாக்குதலை ஆரம்பித்தது. த.வி.ஐ.மு. தேர்தல்களிலே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதான எதிரியாகக் கருதப்பட்டது. த.வி.ஐ.மு வை அம்பலப்படுத்தும் நோக்கத்தோடு 'ஈழமுரசு' 'குத்துக்கரணங்கள்' என்ற ஒரு பகுதியை ஆரம்பித்தது. எடுத்துக்காட்டாக, த.வி.ஐ.மு.வின் மூத்த அரசியல்வாதியான திரு.அமிர்தலிங்கம் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைத் தனது காரில் ஏற்றிக்கொண்டு செல்வதைக் காட்டும் ஒரு புகைப்படத்தை அது பிரசுரித்தது. தமிழீழ இலட்சியத்துக்காக 631 விடுதலைப்புலிகள் தமது உயிரைத் தியாகஞ் செய்துள்ளார்கள் என்று கூறி அப்பத்திரிகை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மதவெறித்தியான ஆவலை வளர்த்தது. விடுதலைப்புலிகள் இயக்கம் தம்மில் 631 பேர் வீரமரணமடைந்ததாகக் கூறினார்கள். இந்தக் காலத்திலே 'ஈரோஸ்' இயக்கத்தின் தலைவர்களுள் ஒருவரான திரு.சங்கர் கொழும்பிலிருந்து வெளியாகும் "சண்டே ஐலண்ட்"க்கு அளித்த பேட்டியில் தம்மில் 150 பேர் மரணமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டு, அவர்களுள் ஒருவரும் 'சையனைட்' அருந்தவில்லையென்றும் கூறினார். மேலும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் தமது கழுத்தில் 'சையனைட்' குப்பிகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் அநேகர் பிடிபடும் சூழ்நிலை ஏற்பட்டபோது அதை அருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டார்கள் எனவும் விளக்கினார். 'ஈழமுரசு' சங்கர் அளித்த பேட்டி தொடர்பாக அவருக்கெதிராகச் சர்ச்சையைக் கிளப்பிவிட்டது. இவையெல்லாம் தேர்தல் கால அரசியலில் வீசும் நாற்றங்கள்தான். அவற்றுக்கு மக்கள் பழக்கப்பட்டிருந்ததால், பெரிதும் அலட்டிக்கொள்ளவில்லை. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவரான மாத்தயா தனது பாத்திரத்திற்குப் புறம்பாக வெளிநாட்டு, கொழும்புப் பத்திரிகைகளுக்கு பேட்டி அளிக்க ஆரம்பித்தார். சிங்களவர் யாழ்ப்பாணத்துக்கு வருவதை வரவேற்போம். அவர்களுக்கு எவ்வித இம்சையும் செய்யப்படமாட்டாதென 'வீக் என்ட்' பத்திரிகைக்குக் கூறினார். சிங்கள மக்களும் தமது இழந்த யாழ் பிரதேசத்தைக் காண சாரசாரையாக வந்தனர். இது எதிர்காலத்திற்கு நற்குறி காட்டியது.

எவ்வாறாயினும், இக்காலத்தில் நிரந்தரமற்ற அம்சங்கள் நிலவியதற்குச் சான்றுகள் இருந்தன. தமிழரின் விடுதலை இலட்சியத்துக்காக தங்களது உறுப்பினர் 631 பேர் மாத்திரமே வீரமரணமடைந்தார்கள் என்று விடுதலைப்புலிகள் இயக்கம் வலியுறுத்தி வந்தது. ஏனைய ஆயுதப் போராட்டக் குழு உறுப்பினரதும், பொது மக்களினதும் மரணங்கள் பயனற்ற பதர்கள் என இழிவுபடுத்தப்பட்டன. அத்தகைய பொறுத்துக்கொள்ள முடியாத அம்சங்கள் சினங்கொண்ட வன்முறைக்கு இட்டுச்சென்றன. இன்னொரு அம்சம் மன்னார், வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் இயங்கிவந்த 'புளொட்', ஈ.என்.டி.எல்.எவ், டெலோ ஆகியவற்றின் அநேக உறுப்பினர்கள் இப்பொழுது விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பழிக்குப்பழி வாங்குகின்ற வேட்கையினால் பலமாகத் தூண்டப்பட்டார்கள். அத்தகையவர்களுள், பிரபலமானவர்கள் 'புளொட்' இயக்க உறுப்பினரான சங்கிலி (கந்தசாமி)யும், ஈ.என்.டி.எல்.எப் ராஜனும் ஆவார்கள்.



இந்தியா அத்தகைய நிலையற்ற ஒரு ஏற்பாட்டைச் செய்ததையிட்டு அநேகர் அதிருப்தியடைந்தார்கள். இந்தியாவைப் பொறுத்தவரையில் சமாதான ஒப்பந்தம் எல்லா ஆயுதப் போராளிக் குழுக்களுக்குமானதொன்று. கொலை செய்வதை ஓர் இயக்கத்தின் உரைகல்லாக எடுத்தோமானால் விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட எல்லா ஆயுதப் போராட்டக் குழுக்களும் அந்தமான் தீவுகளுக்கு அனுப்பப்பட வேண்டும். இது சாத்தியமானதன்று. என்றும் மக்கள் விரும்பியதும் இதுவன்று என இந்தியா மறுபுறம் வாதிடலாம்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இன்னொரு அரசியல் வேலை ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் அம்பலமாயிற்று. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பான ஆனால் சிறு தொகையினருக்கே தெரிந்த விவகாரம் என்னவெனில், பல்கலைக்கழக மாணவன் ரஜாகரன் விடுதலைப்புலிகள் இயக்கத்தால் கடத்திச் செல்லப்பட்டமையாகும். அந்த மாணவன் பொது நல விடயங்களில் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் 1986 நவம்பரில் காணாமற் போன மாணவன் விஜிதரனின் விவகாரத்தில், நடவடிக்கைக்குழு உறுப்பினனாகப் பங்குபற்றினான். ரஜாகரன் சிறுமார்க்ஸியக் குழுவான தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியுடன் தொடர்பு கொண்டிருந்தான் என்று விடுதலைப்புலிகள் இயக்கம் அவன்மீது சந்தேகப்பட்டமையே அவனைக் கடத்திச் சென்றமைக்கு உண்மையான காரணமெனப் பின்னர் அம்பலமானது. பொறியியலாளரான திரு.விஸ்வானந்த தேவனே அம்மார்க்ஸியக் குழுவின் தலைவர் ஆவார். விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் கடுமையாக விமர்சிப்பவர் அவர் கடந்த இரண்டாண்டுகளாக காணாமற் போய்விட்டார். கடல் மூலம் இந்தியாவிற்கு சென்றபோது இலங்கை கடற்படையால் கொல்லப்பட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி (N.L.F.T) யின் ஏனைய உறுப்பினரைத் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்தும் விடுதலைப்புலிகள் இயக்கத்தால் பணமும் ஆயுதங்களும் பற்றி ஏதும் அறியமுடியவில்லை. விடுதலைப்புலிகள் இயக்கம், இந்த விடயத்தில் ரஜாகரன் தமக்கு உதவலாமென நம்பினர். ரஜாகரனைக் கடத்திச் சென்ற போது, நெல்லியடியில் விஸ்வானந்ததேவனின் 70 வயதான தந்தையும் கைது செய்யப்பட்டு, அடிக்கப்பட்டார். அவரது வீட்டுக்காணி நிலமும் தோண்டப்பட்டது. விடுதலைப்புலிகள் ரஜாகரன் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை மறுதலித்தனர். இதனால் மிகமோசமான முடிவு ஏற்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்பட்டது. அதி உற்சாகமும், திறமையும் வாய்ந்த ரஜாகரன் யூலை ஆரம்பத்திலே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சிறைவைப்பிலிருந்து தப்பிவிட்டான். 1987 ஜுலை 17ம் திகதியிடப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கு அவர் அனுப்பிய கடிதத்தில், விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேசி, தனக்கு எதுவித இம்சையும் அவர்கள் செய்யமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தைப் பெறுமாறு வேண்டுகோள் விடுத்தார். அதன் பின்னர் அந்த விடயம் பற்றி விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேசும் பணி மாணவர்களிடமே விடப்பட்டது. ஏனையோர் வேண்டாத பயத்தினால் பின்வாங்கியபோது, மாணவர்கள் மீண்டும் துணிகரமாகச் செயற்பட்டார்கள். மாணவர்கள் விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை சிநேக பூர்வமாக நடந்தது. மாணவர்கள் பிழையான வழியில் கையாளப்பட்டுள்ளார்கள்